பக்கங்கள் 6 விலை சதம் 30 ★

ஈழநாடு

The EELA NADU

மகரி 18 காரகி 21 முகை 14 திகதி 326

யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-1-77

இ. போ. சபை ஊழியர் சகலரின் லீவுகள் ரத்து!

கொழும்பு, செவ்

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் லீவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. முன்னரே லீவு எடுத்தவர்களும் இன்று வேலைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநேர சட்டவிணக்கப்படி வழங்கப்பட்டுள்ள லீவுக்கட்டத்தத்த டிப்போக்களின் பொறுப்பதிகாரி அல்லது சட்டுப்பாட்டதிகாரியின் உரிய அனுமதியுடன் மாறுதல் செய்யமுடியுமென்றும் போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

சபை ஊழியர் கூட்டின லீவு எடுப்பதாக இருந்தால் சபையில் வைத்திய அதிகாரியின் அல்லது அரசாங்க வைத்திய அதிகாரியின் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்

(5ம் பக்கம் பார்க்க)

நாளை வேலைக்குத் திரும்பாத ரயில் ஊழியர் வேலை இழப்பர்!

டாக்டர்களின் சட்டப்படி வேலைக்குமுற்றுப்புள்ளி

அத்தியாவசியசேவைகள்பிரகடனம்;மீறுவோர் தண்டனை பெறுவதுடன் சொத்துக்களும் பறிபோகும்

கொழும்பு, புதன்

இரண்டுவார காலமாக வேலைநிறுத்தம் செய்துவரும் ரயில்வே ஊழியர்கள் நாளை ஆறுந்தேதிக்குமுன் வேலைக்குத் திரும்பாவிட்டால் அவர்கள் தமது வேலையை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. ஏனைய அத்தியாவசிய சேவைகளும் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்க வைத்தியர்களும் 6-ம் தேதிக்கு முன்னதாக தமது வழமையான வேலையை மேற்கொள்ளவேண்டுமென்றும் அத்தியாவசியசேவைப் பிரகடனத்தின் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

சொத்துக்கள் பறிமுதலாகும்

அத்தியாவசிய சேவைப் பிரகடனத்தின்படி வேலைக்குத் திரும்பாத, திரும்ப மறுக்கும் ஊழியர்கள் வேலைநிறுத்தவாதிகளாகக் கருதப்படுவோர்களென்றும் வேலைக்குச் செல்லவர்களை வேலைசெய்பவர்களை தடுத்தல், இடையூறு செய்தல், தூண்டுதல் முதலியவை குற்றமாகக் கருதப்பட்டு நீதிமன்றம் ஒன்றினால் தண்டனை விதிக்கப்பட்டால் அத்தண்டனையுடன் இத்தகைய குற்றவாளிகளின் அசையுள்ள அசையில்லாத சொத்துக்களும் பறிமுதலாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் ஊழியர்களின் வேலைநிறுத்தம் எந்தவித மாறுதலுமின்றி நடைபெற்றுவருகிறது. நாட்டின் ரயில்சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தத்துடன் துறைமுகக்கமிஷன் ஊழியர்களின் வேலைநிறுத்தமும் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனாலும் இதனால் இதுவரை ஏற்றுமதிவேலைகள் பாதிக்கப்படவில்லை. நேற்றுமுதல் தபாலகத்தின் தொடர்பு தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியின் பதினொரு சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கின. இதில் அஞ்சல்தொலைதொடர்பு சேவையாளர் சங்கம் உட்பட நான்கு சங்கங்கள் கலந்து கொள்ளவில்லை.

வேலை நிறுத்தம் தொடர்பாக நாட்டில் எழுந்துள்ள நிலைமையை இன்று அமைச்சரவை பரிசீலனை செய்தபின் அத்தியாவசிய சேவைப் பிரகடனம் பற்றிய முடிவு எடுக்கப்பட்டது.

ரயில்வே ஊழியரின் வேலை நிறுத்தத்தினால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட சொல்லொணாக் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அரசாங்கம் மேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்ற அமைச்சரவை கருதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக அரசாங்க அறிக்கையொன்று தெரிவித்தது.

சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தில் டாக்டர்கள் ஈடுபட்டதால் நோயாளிகள் அனுபவித்துவரும் இன்னல்களையும் அமைச்சரவை பரிசீலனை செய்தது.

அத்தியாவசிய சேவைகள் எனப் பிரகடனம் செய்தபட்ட சேவைகளைச் சேர்ந்தவர்கள் அச்சட்டப் பிரமாணங்களை மீறுவோர் தண்டனை பெறுவர்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோர் அரசியல் நோக்கங்கொண்ட நிலைக்கிளைகளின் கைப்பொம்மைகளாகிவிட்டதாகவும் சட்டரீதியிலல்லாத ஏனைவழிகளில் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சி செய்வதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பொருள்களின் விநியோகம் சீராக நடைபெறவும் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் அரசாங்கத்தின் தலையாய கடமையென்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

எழுதுவினைஞர் குழு இலங்கரத்தினை சந்திப்பு!

கொழும்பு, செவ்.

அரசாங்க எழுதுவினைஞர் கட்டுமுன்னணியைச் சேர்ந்த சில பிரதிநிதிகளை நிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. ஜி. பி. இலங்கரத்தினா இன்று சந்தித்துப் பேசினார்.

கட்டுமுன்னணி பிரமுகருக்குச் சமர்ப்பித்திருந்த கோரிக்கைகள் சம்பந்தமாகப் பேசுவதற்கு அமைச்சர் இலங்கரத்தினா விடுத்த அழைப்பைத் தொடர்ந்து இச்சந்திப்பு இடம் பெற்றது.

நவம்பர் 25-ந் திகதி நடந்த பேச்சுவார்த்தையின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்

(6ம் பக்கம் பார்க்க)

காங்கேசன் பொலிஸில் ஒரு கான்ஸ்டபுக்கு கதா!

மாவிட்டபுரம், செவ்.

கள்ளக்கடத்தல், துப்பாக்கி நடத்தை ஆகிய நடவடிக்கைகள் குறித்து சந்தேகங்கொள்ளக்கூடியவகையில் நடந்து கொண்ட பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் பொலிஸ்சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மேற்படி பொலிஸ்கான்ஸ்டபிள் கடமை நேரத்தில் பொலிஸ்நிலையத்தில் இல்லாமை மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி நிலு. குணநிலவரும் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் அவரைத் தேடியபோது காங்கேசன்துறையிலுள்ளவொன்றில் அவர் இருக்கக் காணப்பட்டார்.

இதைவைத்து அவரது நடத்தை குறித்து விசாரணை செய்த சமயம் சந்தேகத்திற்கிடமான தொடர்புகள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதுவிஷயம் பொலிஸ் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டும் பொலிஸ் தலைமையக அதிகாரிகள் இவரைத் தூரமாற்றி மேற்படி கான்ஸ்டபிளைப் பொலிஸ்சேவையிலிருந்து நீக்கி பொலிஸ்சேவைக் கோவை இடாப்பிலிருந்தும் அவர் பெயரை நீக்கியுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிசார் அறிவித்துள்ளனர். (அ)

மருந்துவாங்கச் சென்ற பெண் விபத்தில் மரணி!

மாவிட்டபுரம், செவ்.

மருந்து வாங்குவதற்காக வைத்தியசாலைக்குப் புறப்பட்ட பெண் ஒருவர் இடைவழியில் வான் ஒன்றினால் மோதப்பட்டு பரிதாபகரமாக வாகன சம்பவம் ஒன்று அக்கவேலியில் இடம் பெற்றுள்ளது.

உடுப்பிட்டியைச் சேர்ந்தவரான முத்தாச்சி [வயது 52] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் வருத்து வாங்குவதற்காக உடுப்பிட்டியிலிருந்து பஸ்ஸில் வந்த மேற்படி பெண் அக்கவேலி பஸ் நிலையத்திற்கு வெளியே எடுத்துவருவதற்காக வீதியைக் கடந்தவேளை வீதியால் வந்த வான் ஒன்றினால் மோதப்பட்டார். உடனடியாக இவர்

(6-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க எழுதுவினைஞர் பங்குபற்றார்!

கொழும்பு, செவ்.

அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கவேண்டாமென்று கொள்ளப்பட்டது. இன்று நடந்த பிரதிநிதிகளின் கூட்டத்தில் இந்தமுடிவு மேற்கொள்ளப்பட்டது.

5 000 பேருக்கு இம்மாதம் ஆசிரிய நியமனம்

மிகுதி 7,000 பேருக்கு மார்ச்சில் இடம் கிடைக்கும்

தொகுதிக்கு 40 பேர்

கொழும்பு, செவ்.

இவ்வருடம் ஆசிரியர் நியமனம் பெறும் 7.2 ஆயிரம் பேரில் 5 ஆயிரம் பேருக்கு இம்மாத நடுப்பகுதியில் விஞ்ஞான கணித ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிகுதி 7 ஆயிரம் பேருக்கும் பல்வேறு பாடங்களைப் போதிப்பதற்காக மார்ச் மாதமளவில் ஆசிரியர் பதவி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆசிரிய நியமனங்கள் தொகுதி அடிப்படையில் தொகுதிக்கு 40 பேர் வீதம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஆசிரியர்கள் அந்தந்த கிராமப்புறங்களிலேயே நியமிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

"திருவாசகத்தை நாளொரு பாடலாக மனனஞ் செய்க"

சைவர்களுக்கு வேண்டுகோள்

வட்டுக்கோட்டை, புதன்.

"எட்டாவது திருமுறையில் ஒன்றாகிய திருவாசகத்தைச் சைவ அன்பர்கள் பக்தி சிரத்தையுடன் கற்கவேண்டும். திருவாசகத்தில் பெருமையை வடலூர் இராமலிங்க அடிகள் அழகுபடுத்தியுள்ளார். ஆன்மிக அறிஞரான வேதநாயகர் இதனைப் பதிப்பித்துள்ளார். அவர் [illegible] திருவாசகத்தை ஆன்மாக்களுக்கு ஒரு பாடலாக மனனம் செய்து ஆன்ம ஈடேற்றத்தினை வழிவகுத்து நடக்கவேண்டும். ஒவ்வொரு சைவ அன்பர்களும் வீடுகளிலும் திருவாசகம் கலைடக்கப் பிரதி இருக்க வேண்டும். இயன்றவரை அச்சடித்து வழங்குவதற்கு மணிவாசகரபைக்கு வரவேண்டும்" இவ்வாறு யாழ்ப்பாணம் நாவலர் தருமபாதுகாப்புச்சபைத் தலைவர் எட்டத்தணி த. சோமசுந்தரம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர்விழா 3-ம் நாள் திருச்சிவஞானம் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அன்றைய இசை சிறப்புச் சொற்பொழிவாளராக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தமிழ் விரிவுரையாளர் சைவநெறி செ. இராமலிங்கமும் விரிவுரையாளர் [illegible] "அழுதால் உன்னை பெறலாமே", "சிந்தை வாய் விடுவாடுக" என்னும் பொருள்களில் உரையாற்றினார்.

இரண்டாம் நாள்

[illegible] தமிழும் சிறந்தோங்கும் காரைநகரில் மணிவாசகர் சபை செய்யும் சேவை மகத்துவம் வாய்ந்தது. இருபத்திரண்டு வருட காலமாக மணிவாசகப் பெருமானுக்கு விழாவெடுத்து வரும் இச்சபையின் தொண்டைப் பாராட்டாமலிருக்க முடியாது என்று அருட்கவி சி. விருத்தகிரி இரண்டாம் நாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சபைத் தலைவர் திரு. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சோ. இராசலிங்கமாருக்கள் 'நற்றிணை வற்றியும்' என்னும்பொருளில் சமய சமூக சதாபிரசங்கம் செய்தார். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்னும் பொருள்பற்றி பண்டிதர் க. வேலாயுதபிள்ளை உரையாற்றினார். (அ)

ப. நோ. கூ. மோசடியாம்

மேலிடத்துக்கு மகஜர்

பருத்தித்துறை, செவ்.

கட்டை வேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் இயங்கும் இவை நிலையமொன்றில் பல மோசடிகள் நிகழ்வதாக மைர் 600பேர் கையொப்பமிட்ட மகஜரொன்று மேற்படி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத்தலைவர் இரா. டி. மேலும் மயிலும், கடுப்பிட்டி எம். வி. இரா. க. தெய்வநாயகி, அரசாங்க அதிபர், உதவிக்கூட்டுறவு ஆணையாளர், இரகசியப் பொலிசார் ஆகியோருக்கு அனுப்பப்பெற்றுள்ளது. இக்கிளைக்கு வந்தவரவுகள், வோயில் சேமிப்பு, லக்ஸ்மிறேகா, மண்ணெண்ணெய் ஆகியவை ஒருவருக்கே விநியோகிக்கப்பட்டதாகவும், இவ்விநியோகம் பற்றி நுகர்வோருக்கு எவ்வித அறிவித்தலும் கொடுக்கவில்லையென்றும், ஒருவருக்கு இரு சேமிப்பு கணக்கேடுகள் கொடுக்கப்பட்டதாகவும், தங்கு[illegible]யாடுவை இந்நேரத்தில் கலைவாரதுக்குக் கடன்கொடுத்த மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லையென்றும் மகஜரில் கூறுகிறது.

மேற்படி கிளைக்கு மிக அண்மையில் கிளைக்கமிட்டி உறுப்பினர் ஒருவரின் கடை உள்ளதாகவும், அநேகமான அரிசி மொறுக்கள் அக்கடையில் கட்டுப்பாட்டு விலைக்கு மேலாக விற்கப்படுவதாகவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

சங்கக்கிளையில்

நாவற்குழி கிராமாட்சி மன்றம்

வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1977

வினைஞர் விடயங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு இவ்வலுவலகத்தோடு தங்களை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒவ்வொருவரும் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. எழுதுகருவி வகைகள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், அச்சிடுதல், கோவை வகைகள், தோக்கடி வேலைக்குரிய கனஞ்சியப் பொருட்கள்.
2. கட்டடங்களின் பழுது பார்த்தலுக்கு வேணவும், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் முதலியன பழுது பார்த்தல், ரூபா 5000/-த் திற்குக் குறைந்த மோட்டார் வாகனங்கள் திருத்தவேலைகளை நிறைவேற்றுதல்.

மேற்படி விண்ணப்பங்களை 1-1-1977-த் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ இவ்வலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். மேலும் விபரங்கள் தேவைப்படின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சோ. சடாட்சரம் ஜே. பி.
தலைவர்.

கிராமாட்சி மன்றப் பணிமனை,
நாவற்குழி.
கைநடி.
[illegible]22-12-76. 5170

லட்ச ரூபா செலவில் செயலகம்

மண்டதீவுப்பு, செவ்.

உலகில் தொகுதி பிரதேச அபிவிருத்திச்சபையின் மத்திய செயலகம் ஒரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. உடுவில் இராசாவீதியில் அமைக்கப்படவிருக்கும் இப் புதிய செயலகத்திற்கும் பொருளாதார, திட்டமிடல் அமைச்சு இந்த நிதியை ஒதுக்கியுள்ளது. மாவிட்ட அபிவிருத்திப் பிரிவின் புதிய திட்டத்திற்கமையவாழ். மாவட்டத்தில் முதல் முதல் நிறுவப்படவிருக்கும் செயலகம் இதுவாகும்.

இதற்கான கட்டிடவேலைகள் அடுத்தமாதம் ஆரம்பமாகுமென தெரிவிக்கப்படுகின்றது. [அ]

விற்பனையாகின்றன! வாங்கிவிட்டீர்களா?

மெயிகண்டான்

கலன்டர்கள்		பிளாஸ்ரிக் டயறிகள்		பேர்ஸ் டயறிகள்	
திருக்குறட் கலன்டர் (சிவப்பு)	7-75	டெஸ்க் பிளாஸ்ரிக் டயறி	12-50	டெஸ்க் பேர்ஸ் டயறி	19-95
திருக்குறட் கலன்டர் (ஸ்பெஷல்)	8-75	நியமன பிளாஸ்ரிக் டயறி	17-95	நியமன பேர்ஸ் டயறி	24-95
தினப் பஞ்சாங்கக் கலன்டர்	5-75	அதிகாரிகள் ,, டயறி	18-95	அதிகாரிகள் பேர்ஸ் டயறி	34-95
பஞ்சாங்க மாதக் கலன்டர்	2-50	வலந் பிளாஸ்ரிக் டயறி	12-50	வலந் பேர்ஸ் டயறி	19-95
சிங்கள பஞ்சாங்கக் கலன்டர்	7:75	அலுவலக பிளாஸ்ரிக் டயறி	9-75	அலுவலக பேர்ஸ் டயறி	18-75
முஸ்லிம் மாதக் கலன்டர்	3-75	பிஸ்னஸ்A பிளாஸ்ரிக் டயறி	10-00	பிஸ்னஸ் 'A' பேர்ஸ் டயறி	15-75
ரேபிள் கலன்டர்	17-95	பிஸ்னஸ் B பிளாஸ்ரிக் டயறி	7-95	பிஸ்னஸ் 'B' பேர்ஸ் டயறி	12-75
மாதக் கலன்டர் (பெரியது)	7-75	இங்கிலிஷ் பிளாஸ்ரிக் டயறி	4-95	இங்கிலிஷ் பேர்ஸ் டயறி	8-25
மாதக் கலன்டர் (நடுத்தரம்)	3-75	ஜெம் பிளாஸ்ரிக் டயறி	3-95	ஜெம் பேர்ஸ் டயறி	7-25
ஒரு தேதிக் கலன்டர்	2-50	பேர்ள் பிளாஸ்ரிக் டயறி	4-50	பேர்ள் பேர்ஸ் டயறி	7-95

சகல பிரபல விற்பனையாளர்களிடமும், எம்மிடமும் கிடைக்கும்.

மெயிகண்டான் 161, செட்டியார் தெரு, கொழும்பு. போன்: 29345
144, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். போன்: 236

உத்தரவாத விலைநிர்ணயம்

கொழும்பு, செவ்வாய்

வாசனைத் திரவியங்கள், கொக்கோ, கோப்பி, எண்ணெய் உட்பட பதினெட்டு பொருட்களுக்கு வர்த்தக அமைச்சு உத்தரவாதவிலைகளை நிர்ணயித்துள்ளது. [ஸ்]

வரிவினம்பரம்

விற்பனைக்கு

வோக்ஸ்வகன் 1 ஸ்ரேஷன் நிலையில் விற்பனைக்கு உண்டு. 62, விதானை வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 5169

எம். ஜி. (M-I) இன மிளகாய் நாற்று விற்பனைக்கு உண்டு. விலை ஆயிரம் திருபது ரூபா. வ. நல்லரத்தினம், விக்டோரியாக் ரோட்டம், கண்டி வீதி, கவுணியர். 5137

தேவை

ரோறு வோட்டர்வாகனங்களை சேவையில் நிலைத்திருக்க வோட்டர்வாகனங்களை சேவையில் செலுத்துவதில் அனுபவமுள்ள சாரதிகளும், வேலை பழக விரும்பு வோர்களும் தாமதமாகாமலாக 14-1-77 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இளைஞர்கள் விரும்பத்தக்கது. ந ரோறு லிமிட்டெட், 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5167

வாத்திய - சங்கீத வகுப்பு கொள்கைகளில் தகுதிக்கு கடைபவராகவும் 55 வயதுக்குட்பட்டவராகவும் முறையாக கணக்கு வைக்கக்கூடியவராகவும் அக்கரையம்குளம் காத்திக்கிராமத்தில் வாணவர் இல்லத்துக்கு பொறுப்பாக இருந்து நடாத்தக்கூடியவராகவும் உள்ள ஒருவர் தேவை. ஜூலை 10-த் திகதிக்கு முன் ஆரம்பவரவுகளுக்கு இருந்த பெற்ற 2 நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். அருந்த சம்பளம் வழங்கப்படும். பொறுப்பாளர், ஆலய இல்லக் காத்தி சேவா சங்கம், காத்தி நிலையம், கருத்திராபுரம் P. o., கிளி நொச்சி வழி. 5175

வகுப்புகள்

ஆங்கில வகுப்புகள். ஆரம்பம் பெற்றவர் முதலாம் திகதி. G. C. E. (O/L), N. C. G. E. & H. N. C. E. கொழும்பு, சாவகச்சேரி, கொக்குவில், காங்கேசன்துறை, வண்ணார்பண்ணை (வைத்தீஸ்வரா மாடசாலைக்கு அருகாமை) ஆகிய இடங்களில் அனுபவமிக்க ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றது. குறிப்பிட்ட சில இடங்களே உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். A. சத்தியநாதன், 43, சபாபதி வீதி, கோட்டை. 5155

77 ஆண்டில் நடைபெறும் G. C. E. [O/L] பரீட்சைக்கு ஆயத்தமாக, விஞ்ஞான பகல் முழு நேர வகுப்புகளும், N. C. G. E., H. N. C. E. மாலை நேர வகுப்புகளும் நடைபெறும். ஆரம்பம் 18-1-77, யாழ் சட்டக் [illegible]யம், பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5176

JAFFNA LAW CENTRE

- ★ First in Laws.
- ★ G. A. Q.
- ★ Institute of Administrative Accountancy.
- ★ Spoken English.

Application closing 10-1-77.

81, Main Street,
Jaffna.
5177

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

அரபுப் பிரதேசங்கள் சம்பந்தமாக

சமரசதீர்வுக்குத் தயார்

இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

ஜெருஸலம், ஜன. 4

"அரபு நாடுகள் இஸ்ரேலுடன் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாகச் சமாதானத் தீர்வுக்கு வர விரும்பினால் இஸ்ரேல் அதற்குத் தயாராக இருப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் திரு. ராபின் தெரிவித்துள்ளார்.

ஜெருஸலத்திற் தொழிற்கட்சியின் இடதுசாரியினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே திரு. ராபின் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, புதிய அரசைச் சமாதானத் தெரிவுசெய்யுமாறு திரு. ராபினுக்கு இஸ்ரேலிய ஜனாதிபதி திரு. கச்சீர் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வருங்காலத்திற் அமையவிருக்கும் பாலஸ்தீன ராஜ்யம் எந்த விதத்திலாவது ஜோர்தானுடன் தொடர்புடையதாக விருக்கவேண்டுமென எகிப்திய அதிபர் திரு. அன்வர் சதாத் அண்மையில் யோசனை தெரிவித்திருந்தார்.

இஸ்ரேலுடைய எல்லையுடன் இணைந்ததாகப் பாலஸ்தீன ராஜ்யம் அமையாது. இஸ்ரேல் மீது வருங்காலத்திற் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதாக இந்த யோசனையை நீண்ட காலமாக இஸ்ரேல் எதிர்த்தே வந்துள்ளது.

எகிப்திய அதிபரின் இந்த யோசனையை இஸ்ரேல் முற்றாக நிராகரித்துவிட்டதாகச் செய்திகள் அண்மையில் தெரிவித்தன.

இஸ்ரேல்-பாலஸ்தீன சமாதானத்திற்கான இஸ்ரேலிய சபையின் தலைவராக இருக்கும் மேஜர் ஜெனரல் பெலட் நேற்றுச் செய்தி நிருபர்களின் மாநாட்டில் பேசுகையில் "பெய்ரூத்தில் இருக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமைக்கிடம் அதிக்கமே நிலங்களுக்குள் இஸ்ரேல், அங்கீகரிப்பதை உறுதிப்படுத்துமென்று நான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளும் கட்டுக்கோப்பில் தானும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரேக்டப்பிரதிநிதி ஒருவரும் பாரிஸில் நேற்று முன்தினம் கையெழுத்திட்டதாகவும் அவர் கூறினார்.

இது உறுதிப்படுத்தப்படுமேயானால் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அடிப்படை நோக்கங்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதையே குறிக்கும். இஸ்ரேல் அங்கீகரிப்பதில்லையென்பதும், இஸ்ரேல் இருக்குமிடத்தில் பாலஸ்தீன ராஜ்யத்தை அமைப்பதுமே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் குறிக்கோளாகும்.

கட்டுக்கோப்பை இந்த திருப்பர்கள் மாநாட்டில் சமர்ப்பித்த ஜெனரல் பெலட், பாலஸ்தீன விடுதலை இயக்கம் பிரதிநிதி யாரென்பதை வெளிப்படுத்த மறுத்துவிட்டார்.

கட்டுக்கோப்பில் கையெழுத்திடப்பட்டது இஸ்ரேலியப்-பாலஸ்தீன உறவுகளில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகுமென்று குறிப்பிட்ட ஜெனரல் பெலட் செய்தியாளர் மாநாடு முடிவுறும் பாரிஸில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்ததாகவும் சொன்னார்.

இது இவ்வாறிருக்க எதிர்காலத்திற் உண்டாகக்கூடிய பாலஸ்தீன ராஜ்யத்திற்கும் ஜோர்தானுக்கும் மத்தியிலான தொடர்பை அங்கீகரிக்க எகிப்திய அதிபர் அன்வர் சதாத் தெரிவித்திருக்கும் விருப்பம் சரியான திசையில் எடுத்து வைக்கப்பட்ட ஒரு அடியாக இருக்லாமென்று இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. அலொன் நேற்றுச் சொன்னார்.

ஜனாதிபதி சதாத்தின் அறிவிப்பை முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தாம் கருதுவதாக இஸ்ரேலிய அமைச்சரவையில் தெரிவித்த திரு. அலொன், பாலஸ்தீனப் பிரச்சினைப் பேச்சுவார்த்தையில் ஜோர்தான் மன்னரை மீண்டும் ஈடுபடுத்தத் முயற்சியாகவும் அந்த அறிவிப்பு இருப்பதாகச் சொன்னார். [ஸ்ரீ]

மலேஷிய பிரதமர் பயணமானார்

கோலாலம்பூர், ஜன. 4

மலேஷியப் பிரதம மந்திரி திரு. ஒன் மந்திரியழகரும் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற் பொருட்டு இன்று தம் பயணத்தை மேற்கொண்டார்.

எகிப்திய, லிபியத் தலைவர்களைச் சந்தித்து திரு. ஒன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்.

எகிப்தில் 4 நாட்கள் தங்கியிருக்கும் இவர் எகிப்திய அதிபர் அன்வர் சதாத்துடன் விரிவான பேச்சுவார்த்தைகள் நடாத்துவார். [ஸ்ரீ]

இஸ்ரேல் அமைச்சர் தற்கொலை

டெல்அவிவ், ஜன. 4

இஸ்ரேலிய வீடமைப்பு அமைச்சர் திரு. ஒல்பர் நேற்று தற்கொலைசெய்து கொண்டார்.

இத் தற்கொலைக்கான காரணம் என்ன எந்த விதத்தில் அவர் உயிரை மாய்த்துக்கொண்டார் என்ற விவரங்கள் டெல் அவிவில் இருந்து வெளியான மேற்படி செய்தியில் தெரிவிக்கப்படவில்லை. [ஸ்ரீ]

ரொடீஷிய பேச்சுக்கள் வெற்றியளிக்கும்

நிச்சாட் நம்பிக்கை

கேப்டவுன், ஜன. 4

"ரொடீஷிய விவகாரம் தீர்க்கப்படுவது ஒன்று அசாத்தியமானதல்ல. இவ்விவகாரம் தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது." என்று ரொடீஷிய வெளிவிவகாரம் தொடர்பான ஜெனீவா சமாதான மாநாட்டுத் தலைவர் திரு. ஐவர் நிச்சேட் தென்னாபிரிக்கப் பிரதமர் திரு. போர்ட்டரைச் சந்தித்தும் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின் கூறினார்.

தமது பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் எதையும் திரு. நிச்சேட் வெளியிடவில்லை.

ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள திரு. நிச்சேட் இம்மாதம் 17ந் திகதி ஜெனீவா மாநாட்டைக் கூட்டவுள்ளார்என்பது தெரிந்ததே. [ஸ்ரீ]

அமெரிக்காவிலேயே உச்சிமாநாடுகள்

தமது திட்டங்கள் பற்றி கார்ட்டர்

வாஷிங்டன், ஜன. 4

"நான் பதவியேற்றதும் ஆரம்ப காலத்திற் வெளிநாட்டுத் தலைவர்களுடன் அமெரிக்காவில் வைத்தே உச்சிமாநாடுகள் நடாத்துவேன்" என்று புதிய அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. ஜிம்மி கார்ட்டர் நேற்று ஜோர்ஜியாவில் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

"சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரஸ்னேவுடன் மட்டுமல்ல மேற்கத்த வேறு தலைவர்களுடனும், வெளிநாட்டு உறவுகளையும் பலப்படுத்திக்கொள்ளும் வகையில் பேச்சுவார்த்தைகள் நடாத்தத் நான் தயாராக இருப்பதாகவும் திரு. கார்ட்டர் இப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் யோசாயுதங்களை மட்டுப்படுத்துவது பற்றி அமெரிக்கா சோவியத்யூனியன் ஆகிய இரு நாடுகளுக்கும் மத்தியில் ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்படுவது அவசியமானது என்று திரு. பிரஸ்னேவ் அமெரிக்க அரசியல் விமர்சகர் திரு. கிங்ஸ்பரி ஸ்மித்துக்கு அளித்த விசேட பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

திரு. பிரஸ்னேவ் இப்பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது:

"உலக மக்களின் நலனை முன்னிட்டு அணுஆயுதப் போர் நிகழ்வதைத் தடுப்பது சோவியத் யூனியனதும், அமெரிக்காவினதும் மிகப் பெரிய கடமையாகும்.

1977ம் ஆண்டு ஆயுதப் போட்டியை நிறுத்தும் மார்க்கத்தில் ஒரு திருப்புமுனையாக அமையவேண்டுமென விரும்புகிறோம்.

"சோவியத் யூனியனுக்கு எந்த ஒரு நாட்டையும் பயமுறுத்துகின்ற ஆற்றல் தாக்குகின்ற நோக்கம் கிடையாது.

சோவியத்-அமெரிக்க உறவுகளின் அனுபவமானது உயர்மட்டச் சந்திப்புக்களின் பயனைக் காட்டுகின்றது. இத்தகைய சந்திப்புக்கள் தொடர்ந்து நடைபெறவேண்டும்." [ஸ்ரீ]

தென்னாபிரிக்காவில் கறுப்பர் ஆட்சி

அமெரிக்காவின் திட்டம்

வாஷிங்டன், ஜன. 4

"தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை கறுப்பர் இனமக்களின் ஆட்சியை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா பலாத்தார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்" என்று ஐ. நா. சபையில் புதிய அமெரிக்கப் பிரதிநிதியாக நியமிக்கப்படவிருக்கும் திரு. அன்ட்ரூயங் கூறியுள்ளார்.

புதிய அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. ஜிம்மி கார்ட்டரால் கறுப்பர் இனத்தவர் ஒருவர் ஐ. நா. சபையில் பிரதிநிதியாக நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இதேவேளை தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி திரு. போர்ட் அமெரிக்க ஸ்ஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் "திரு. ஜிம்மி கார்ட்டர் ஐரோப்பிய தலைவர்களைச் சந்ித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டியது அவசியம்" என்று கூறியுள்ளார்.

மத்தியகிழக்குப் பிரச்சினை, தென்னாபிரிக்கப் பிரச்சினை என்பன ராஜதந்திர முயற்சிகள் மூலம் தீர்த்துவைக்கப்படக்கூடியன என்று திரு போர்ட் இப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவை கிழக்கு நீண்ட கால ஆபத்துகள் எதிர்நோக்குகின்றன என்றும் மேலும் இப்பேட்டியில் திரு. போர்ட் கூறியிருக்கிறார். (ஸ்ரீ)

தென்னாபிரிக்கவடுகொலைகள்

பொலிஸ் நடத்திய அட்டூழியம்

லண்டன், ஜன. 4

சில தினங்களுக்கு முன் தென்னாபிரிக்க நகரமான சோவெட்டோவில் கறுப்பு இனத்தவரால் நடத்திய ஆர்ப்பாட்டங்களின்போது நிராயுதபாணிகளான சிறுவர்சிறுமிகள் எல்லிதம் பொலிசாரால் கொடுமைக் குள்ளாக்கப்படுகிறார்கள் என்பது பற்றிய விபரம் இப்பொழுது வெளியாகியுள்ளது.

தென்னாபிரிக்காவில் பிரிட்டிஷ் டெலிவிஷன் நிறுவனம் ஒன்று இரகசியமாக பிடித்துள்ள டெலிவிஷன் படத்தின் மூலம் இந்த இரகசியம் வெளியாகியுள்ளது.

'சண்டே மிறரேயர்' என்ற தலைப்பிடப்பட்ட இப்படம் அண்மையில் இங்கு வெளியிடப்பட்டது. பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் 300 பேர்வரைதான் பலியாகியுள்ளார்கள் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இப்படத்தின்படி பொலிஸ் அட்டூழியத்தினால் இன்னும் ஏராளமானவர்கள் காயமடைந்திருக்கவேண்டும் என்று தோன்றுகின்றது.

பொலிஸ் அட்டூழியச் சம்பவங்கள் பற்றி ஆயிரக்கணக்கான மக்கள் தங்களிடம் உயிரையும்பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் எடுத்துக் கூறினார்களென்றும் தங்கள் கோஷ்டி எந்த நிமிடமும் நாட்டைவிட்டு வெளியேற்றப்படக்கூடிய ஆபத்து இருந்தது உண்மைதான். ஆனால் அவர்கள் தம்உயிரையே பரிசொடுக்குள் ஆபத்திலிருந்தார்களென்றும் இந்தப் படத்தைத் தயாரித்துள்ள பிரான்டன் டெலிவிஷன் குழுவினர் கூறியுள்ளனர்.

மாணவர் தலைவர்களை பொலிசார் கைதுசெய்தவுடன் புதிய தலைவர்கள் உருவாகிறார்கள் என்றும், தென்னாபிரிக்கக் தூர்களில் பொலிசார் பிரச்சனையாய் இருப்பது ஒரு சாதாரண விஷயமாகிவிட்டதென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஒன்றை நேரில் பார்த்த ஒருவர் பின்வருமாறு கூறினார்.

ஒருநாள் காலையில்வகுப்புகள்

[4ம்பக்கம் பார்க்க]

இந்தியாவுக்கு உள்நாட்டு வெளிநாட்டு ஆபத்துக்கள்

இந்திரா எச்சரிக்கை

புவனேஸ்வர், ஜன. 4

பாரத மக்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலிருந்தும் தங்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்களை நசித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும்" என்று பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று ஒரிஸா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

ஒரிஸாவுக்கு ஒன்றுநான் விஜயம்ஒன்றை மேற்கொண்டு நேற்று இங்கு வந்துள்ள திருமதி காந்தி ஒரிஸாவின் வரட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டிருக்கிறார்.

திருமதி காந்தி மேற்படி கூட்டத்தில் மேலும் பேசுகையில், "உள்நாட்டு, வெளிநாட்டு தீய சக்திகளின் ஆபத்துக்களிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள எம்மத்தியில் ஒற்றுமையும், கட்டுப்பாடும் உறுதி பெறவேண்டும்.

எமது அரசாங்கம் ஏழைமக்களின் நல்வாழ்வினையே மிக அக்கறை காட்டிவருகிறது.

படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுமல்லாமல் அனைவரும் நாம் இந்தியர் என்ற தேசிய ஒருமைப்பாட்டுடன் அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

ஒரிஸாவின் புதிய முதலமைச்சர் திரு. பிஜுபட்நாயக் ஆச்சரியமாகவும் பேசினார். [ஸ்ரீ]

வெங்காயத்தை அழிக்கும் புழு!

கலிபோர்னிய நிபுணர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதி விவசாயிகளின் வெங்காயத்தை அழிக்கும் புழு தொடர்பான ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு கலிபோர்னிய விவசாய நிபுணர் ஒருவரும், கமத்தொழில் பயிர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் கமத்தொழில் பணிப்பாளரால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த கௌத் மைலர் என்ற விவசாய நிபுணருடன் கமத்தொழில் அதிகாரியான திரு. பொ. நாகலிங்கவாசகமும் இவ்வாய்வின் பொருட்டு இன்று வந்து நேற்று பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தை எம். பி. திரு. துரைரத்தினம் எம். பி. சந்தித்து உரையாடினர். பேண்டுகோள் விடுத்துள்ளார். [ஸ்ரீ]

இப்புழுக்களின் தொல்லையால் வடபகுதி விவசாயிகள் அடையும் தொல்லை குறித்து திரு. துரைரத்தினம் எம். பி. தேசிய அரசுப் பேரவையில் பிரஸ்தாபித்ததுடன் இப்புழு அழிவுக்குரிய விவசாயி நடவடிக்கைகளை மேற்கொள்ளாத கமத்தொழில் பணிப்பாளரை நத்திமூலம் கேட்டிருந்தார்.

வெறும்வெங்காய பாதிப்புக்கு இலக்காகியிருக்கும் விவசாயிகள் மேற்படி இருவரையும் சந்தித்த ஆரோக்கிய பேறுவதற்கு பெரும்பாலான விவசாய உற்பத்தியாளரையே. அல்லது தங்களையே அணுகுமாறு திரு. துரைரத்தினம் எம். பி. தைச் சந்தித்து உரையாடினார். பேண்டுகோள் விடுத்துள்ளார். [ஸ்ரீ]

பருத்தித்துறையில் நோயாளர் அவதி

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் டாக்டர்கள் நோயிடிப்படி கடமையாற்றிவருவதாக் ஏராளமான நோயாளிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்புவதுடன் உள் நோயாளிகளின் தொகையும் பெருகியுள்ளது. வார்டுகளிக் இடநெருக்கடி அதிகரித்து வருகிறது. தபாற் போக்குவரத்துச் சீராக இல்லாமையால் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு இரத்தம் சோதிப்பதற்கு இரத்தம்கூடுப்பில் பெறுவதிலும் அதிகதாமதம் மேற்படுகிறது. சில நோயாளிகளின் உறவினர் தாங்கள் நோடியாகவே யாழ். பெரியாஸ்பத்திரிக்கு பரிசோதனைக்காக இரத்தத்தைக்கொண்டு சேர்த்துவிடுகின்றனர். ஆனால் சிகிச்சைபெறும் வாய்ப்புப் பெறும் நோயாளிகளை டாக்டர்கள் பேரிய வேலைகளும் நேரமுக் எடுத்துப் பார்த்துச் சிகிச்சைவளிக்கின்றனர்.

பசுவதை முற்றாக ஒழிந்தது

புதுடில்லி, ஜன. 3

இந்தியாவில் இப்போது பசுவதை முற்றாகத் தடுக்கப்பட்டுவிட்டது.

உள்துறை அமைச்சர் திரு. ஓம்மேத்தா அவைமன்றில் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து பல்வேறு அரசுகளும் பசுவதையைத் தடுக்க சட்டம் இயற்றியுள்ளன.

"மனித சுபிட்சத்துக்கு பயன்படவேண்டும்"

திரைப்பட விழாவில் யோசனை

புதுடில்லி, ஜன. 4

'மனிதகுலத்தின் சுபிட்சத்திற்குப் பயன்படுவகையில் திரைப்படங்கள் தயாரிக்கப்படவேண்டும்' என்று புதுடில்லியில் நேற்று ஆரம்பமான சர்வதேச திரைப்பட விழாவில் பேசுகையில் பாரத நாட்டு ஒலி பரப்புத்துறை அமைச்சர் திரு. கல்யாண் தெரிவித்தார்.

இவ்விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு இலங்கை நாட்டு ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேராவும் புதுடில்லி வந்துள்ளார். இத்திரைப்பட விழாவில் பங்குபற்றும்பொருட்டு இலங்கையில் இருந்து 6 சிங்களத் திரைப்படங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய பட்டதெரிவுடன் இவ்விழாவில் இருந்த நடிகர், இருந்த நடிகை, சிறந்த தயாரிப்பாளர் நெறியாளர் என்போர் தெரிவு செய்யப்படுவர். [ஸ்ரீ]

அவசரநிலை ஏற்பட்டபின்னரே இந்தியாவில் பொதுத்தேர்தல்

புதுடில்லி, ஜன. 4

இந்தியப் பொதுத்தேர்தல் இவ்வருடம் மார்ச் மாதத்தில் நடைபெறுமென்று இந்தியாவில் பரவியுள்ள வதந்திகளைத் திட்ட உள்துறை அமைச்சர் திரு. ஓம் மேத்தா மறுத்துள்ளார்.

இது வேறும் ஆதாரமற்ற வதந்தியே என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் விடுத்த செய்யப்பட்டதை ஆதாரமாக வைத்து மேல் தேர்தல் வதந்திகளைக் கிளப்பியுள்ளனர் என்றும் தெரிவித்த அமைச்சர், எதிர்க்கட்சியினர் தமது இயக்கத்தைக் கைவிட்டு நாட்டில் அவசரநிலை ஏற்படட பின்னரே பொதுத்தேர்தல் நடைபெறும் என்று கூறினார்.

வடபகுதியில் மேலும் பல தொழில்பயிற்சி நிலையங்கள்

இணைக்களம் அமைக்கும்

பருத்தித்துறை, செவ்.

வடபகுதி தொழில் நிலையங்கள் வடக்கமாணத்தின் மற்றைய பகுதிகளிலும் தொழிற்பயிற்சி நிலையங்களை அமைக்க தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள தேர்தல்படியில் இலங்கையுக்கு கல்லூரித் தொழிற் பயிற்சி நிலையம் மேலே தேர்தல் மாற்றப்பட்டதன் தேர்தல்படியில் ஒரு தையல் பயிற்சி நிலையம் நிறுவப்படும். அதற்கான முற்பகுதியில் தற்சமயம் பயிற்சி நிலையம் ஒன்று சாவகச்சேரியில் நிறுவப்படவுள்ளது. அந்த பெண்களுக்கான ஒரு தையல் பயிற்சி நிலையமும் நிறுவப்படும். இதைவிட தேர்தல்படி, காரைநகர், தெல்லிப்பழை பகுதிகளிலும் தையல் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்நிலையங்களில் பயிற்சிகாலம் ஒரு வருடமாகும். இப்பயிற்சிக்காலத்தில் பயிற்சியாளருக்குதூசொன்றுக்கு 2 ரூபா வழங்கப்படும். இப்பயிற்சியாளர் தமது பயிற்சி முடிந்ததும் சவூதி அரேபியா போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பு பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிகிறது. [அ]

பொலிஸ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகவிருந்த சமயத்தில் பொலிசார் உள்ளே நுழைந்தனர். முதலிடம் கொடுமலே பிள்ளைகளை பத்துநிமிடங்களில் வெளியேறும்படி கட்டளையிட்டனர். பத்துநிமிடங்கள்முடிவுறு முன்னரே பிள்ளைகள் சுற்றுத் தள்ளப்பட்டு விட்டனர். குறிப்பாக்கப்பட்ட பொலிசார் சுட்டனர். பிறகு பிள்ளைகளை தரத்திலிருந்தனர்.

சாவலில் இருக்கும்போது தற்கொலை புரிந்துகொண்டனர் என்று அதிகாரிகள் அறிவித்த சட்டு எதும்பாகள் பத்திரிகை டெலிவிஷன் கோஷ்டியினர் ஆராய்ந்துள்ளனர். இந்தக் கற்று பொய் என்று ஒரு வெள்ளாரான பத்திரிகை ஆசிரியரும் இறந்தவர்களின் உறவினரும் கருத்து தெரிவித்துள்ளனர். இறந்தவர்கள் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

மரணத்துக்கான காரணங்களை வெளிப்படுத்திடும் வகையில் விசாரணைகளுக்குள்ளாகவேதும் என்று இறந்தவர்களின் உறவினர் பயமுறுத்தப்பட்டுள்ளனராம்.

விசாரணைப் முறிந்ததாலும் மரணமான ஒரு பையனின் பெற்றோர் விஷயத்தை வெளியிடக்கூடாதென்று பயமுறுத்தப்பட்டுள்ளனராம்.

சாவலில் வைக்கப்பட்டிருந்த ஆறுபேர் எரிவிதாரணமும் இன்றி மரணமடையுள்ளனராம். அவர்களின் சடலங்கள் இரகசியமாகப் புதைக்கப்பட்டனராம்.

ஒருநாள் மாலையில் மூன்று பொலிஸ் வாகனங்கள் சவக்காலைக்குள் போவதைத் தாம் கண்டதாகவும் இறந்தவர்களைப் புதைக்கவே இவைகள் அங்குபோயிருக்கலாமென்பதில் சந்தேகமில்லையென்றும் ஒருவர் கூறியுள்ளார்.

லண்டன் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், புதன்

சண்டிலிப்பாய் அம்பனைக்கலையைச் சேர்ந்த வைத்திலிங்கம் சதாசிவத்தால் இலங்கையில் நடத்தப்பட்ட லண்டன் எம். ஈ. டி. பரீட்சையில் சித்தி படைத்துள்ளார். கல்லூரிப் பழைய மாணவராக இவர் மேற்படிப்பை இந்தியாவில் மேற்கொள்ளவிருக்கிறார். (அ)

பர்மாவில் 8 பேர் கைது!

ரங்கூன், ஜன. 4

பௌத்த சின்னங்களை திருட முயன்றதாகக் கூறப்படும் எண்பர் பர்மா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். [ஸ்ரீ]

கொரிலாப் போர் வலுக்கிறது!

சாலிஸ்பரி, ஜன. 4

ரொடீஷியாவில் தமது இனத்தவர்களின் ஆக்கி மனிதவதை வெள்ளையர் அரசு எதிர்த்து வருவதன் எதிரொலியாக, இன்று கொரில்லா யுத்தம் வலுவுற்றுவருவதாக ஆபிரிக்க தேசியத் தலைவர்களில் ஒருவரான திரு. முகாபே தெரிவித்திருக்கிறார். (ஸ்ரீ)

முன்னணியில் திகழ பாட்டா அணியுங்கள்

தரத்தில் முதன்மை
சொகுசில் முதன்மை
பாடசாலைக்கும்
விளையாட்டுக்கும்
பாட்டாப் பாதணிகள்.

முதலில் பாட்டா
பின்னர் பாடசாலை

வளமான மண், தெளிந்த நீர், சுத்தமான காற்று, சுதந்திரமான விலங்கினம், குப்பையிடாதீர்.

ராணி (யாழ்-நகர்)
ஃ ஜெயசங்கர் ஃ லக்ஷ்மி
ஃ ஜெயா ஃ முத்துராமன்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
கனிமுத்து பாப்பா

ரீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 & 9-45
என். எஸ். கிருஷ்ணன் மதுரம்
வி. வானுமதி-எஸ்.வி. சகஸ்ரநாமம்
நடித்த
நல்லதம்பி
கதை,வசனம் - எதிரொலி சி. எஸ். குமாரதுரை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
முத்துராமன்
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதுக் புதிய பிரதி)

ராஜா யாழ்ப்பாணம் (தினசரி 4 காட்சிகள்)
எஸ். ஸ. ஆர்.—ராஜஸ்ரீ
கருணாநிதி—சரோஜாதேவி நடித்த
தேடி வந்த செல்வம்

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
வொலி—மஞ்சுளா—ஜெயகுமார்—நாகேஷ்
நடித்த
மன்னவன் வந்தானடி
(சஸ்பென்ஸ் கலை)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7693
தினசரி 4 காட்சிகள்
வெற்றிகரமான 107வது தினம்
வொலி — ஜெயலலிதா — மஞ்சுளா
நடித்த
அவன்தான் மனிதன்

Rio (Jaffna) Grand Release
Daily 10-30 a. m. 4-45, 7-15, 9-45 p. m.

Nat Cohen presents for EMI Film Distributors Limited A LORIMAR PRODUCTION
VANESSA REDGRAVE CLIFF ROBERTSON
and SUSAN GEORGE in
OUT OF SEASON
Technicolor® Distributed by EMI Film Distributors Limited
EMI

வடஇலங்கைச் சங்கீதசபை பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம் வடஇலங்கைச் சங்கீதசபை நடாத்திய 1976-ம் ஆண்டுச் சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள்வெளி வந்துள்ளன. சித்தியடைந்தோர்களின் விபரம் வருமாறு:

முதலாம் பகுதி
முதலாம் பிரிவு

மிருதங்கம்

விக்னேஸ்வரன் சந்தரன், ஆனந்தகுமார் கண்ணுத்துரை, தேவராஜன் சண்முகராஜன், துஷ்யந்தன் பிரபாகரன், காண்டீபன் கிருஷ்ணராஜா, யோகேஸ்வரன் புஷ்பராஜா, நகுலராஜன் கோ, சயந்தன், தேவதாசன் சந்தோஷ், கிரிஷ்ணேஸ்வரன் குருசாமி, ஸ்ரீகண்ணமாலன் தயாநிதி, ஜோன் ஜீவநேசன் ஜீவராஜன்.

இரண்டாம் பிரிவு

சேதிலன் முத்துலிங்கம், பேரானந்தன் பரமு, ஆதிநாதன் சோமநாதன், கோபாலன் சந்தானகிருஷ்ணன், கிருபாலன் சந்தானகிருஷ்ணன், அருள் செல்வன் செல்வராசா, சோமசுந்தரன் செந்தில்நாதன், தேவராஜ பரமு சண்முகலிங்கம், தேவராஜன் பரமானந்தசோதி, ரவிராஜன் [illegible] ஜெயபிரகாஷ், கிருஷ்ணராஜன் சந்தானமூர்த்தி ஜயர், பவானந்தன் மகாலிங்கம், குலசேந்திரன் குமாரசாமி பாலகுமார் சந்தானம், கமலேந்திரன் நடராஜா, கதிரவன் அழகலிங்கம், சண்முகநாதன் நடராஜகுருக்கள், சந்திரமௌலி இரவிசேந்திரன், தமிழ்ச்செல்வன் பரமசோதி, கண்ணதாசன் சந்தானம், சோமவல்லபன் பத்மநாதன் ஐயர், விஜேந்திரா சந்தனி, திருநாவுக்கரசு இரவிசாமி, கமலேஸ் சரவணபவன், கேதீஸ்வரன் சரவணபவன், ஹரிஹரன் கார்த்திகேசு, சுதர்சன் துரைசுவாமி, ராஜ்குமார் வேலுதேவன், சுபாஹரன் நவரெத்தினம், இராஜ்குமார் கந்தபிரமணியம், வதனராணி நவமிக்கிக்கே, தேவராஜி நவரெத்தினம், சேந்திரிக்கல் இரத்தினசிங்கம், கலைமோகன் கதிரித்தம்பி, இராதாகிருஷ்ணன் கிருஷ்ணசாமி, சோமசுந்தரன் சுப்பிரமணியம், இரவிசங்கர் இராமநாதன், வசந்தன் சோமசுந்தரராஜா, கிருஷ்ணன் கருணாகிரமூர்த்தி, நவிலராஜ் தம்பிராசா, வாசுதேவன் சேனாதிராசா, பாலேந்திரா துரையிராசா, ஞானியேந் குமாரராஜன் தேவராஜா, சேந்திரசேகரன் கணபதிப்பிள்ளை, ராஜ்குமார் துரைராஜா, குருபரன் சண்முகலிங்கம், கமலகிருஷ்ணா இரவிச்சந்திரன், கிருஷ்பரதாதன் சந்தானம், ரவிராஜன் தம்பிமுத்து, சோமசேகரசர்மா கருணாட்சர்மா, அருள்தாஸ் இராஜலிங்கம், கமலேந்திரன் தயாநந்தன், சந்திரசேகரன் சோமசுந்தரக்குருக்கள், மகேஸ்வரன் இராசசாமி, கேமா குமார் செல்லையா, நந்தகுமார் சண்முகம், ஸ்ரீராம் தம்பராஜா, சிவகுமார் ஆறுமுகம், ரமணன் மாணிக்கவாசகர், கலீரன் கணபதிப்பிள்ளை, ஜெயேந்திரா சுவாமிராசா, தேவ குணரத்தினம், இராமணன் தருமராசா, சந்திரசாமி இராசையா, சிவதேவன் சபாரத்னம், தயாபரன் சிதம்பரம்பிள்ளை, தவராஜா ஜெந்தகுமாரவேலு, பூலோக நடேசன், சாதுரு முத்துலிங்கம், சிவபரன் வசந்திரவேலு, வைதிலி துரைராஜன்.

இரண்டாம் பகுதி
முதலாம் பிரிவு

ஸ்ரீகாந்தன் நடராஜகுருக்கள், முருகன் இரத்தினம், சதாஹரன் பாலசுப்பிரமணியம், டிலோன் ஹரன்ராஜ் விநாயகரூபன், இராஜ்குமார் நிருபசேகரம், வசந்திரேவி நவரத்தினம், சிதரன் சிவப்பிரகாசம், இளஜெஸ்வரன் இறஸி மகேஸ்வரன் இரத்தினசபாபதிக்குருக்கள்.

இரண்டாம் பிரிவு

யோகராசா சந்தரசாமி, கௌரிசங்கர் பாலசந்திரன், யோகராசாசந்தசாமி பாலகிரமணியசாமி, கெருமராஜ் பாலசந்தரன், பூவியன் ரஞ்சித் சிவப்பிரகாசம், துஷ்யந்தன் மகேஸ்வரன், சேரன் சோமசுந்தரன், ரவிச்சந்திரன் நடேசன், சதீஸ்வரன் இராசராஜாவரதன் ஸ்ரீ இரங்கநாதன், நவநீதராசா க. கமலேஸ்வரன் பாலகிருஷ்ணன், சேதீஸ்வரன் மதுரவிநாயகம், ரவிமோகன் செல்வத்துரை, சேனுகா கண்டிபுரநாதன், அகிலன் வாஞ்சிநாத ஐயர் சந்திரமோகன் ஆனந்தராசா, நந்தகுமார் ஆனந்தராசா, விஜயரூபன் இராஜரட்ணம்.

சாதாரண சித்தி

பிரேமகுமார் துரைரத்தினம் சதாஹரன்கணேஸ்வாமி, சதாசிவ அற்புதவரதன், இராஜகுமார் வாஞ்சிநாதன், பாலசுப்பிரமணியம் பொன்னுச்சாமி, கோபேஸ்வரன் கமலரத்னம், துரைராசா கிருஷ்ணகாந்தன் கணேசு, கணேசலிங்கம் பாலசந்தரன், தஞ்சகுமார் சந்தரசா, கமலரன் பத்மநாதன், குமேந்திரன் குமுதகுமாரவேலு, காமகோடி கிருஷ்ணகுமாரதாசன் நேசிக் நேசன் விஜேந்திரன் இராஜமனோகரன், நகுலேஸ்வரன் இராசகோபால், சந்திரபாராயணன் ஆறுமுகம் பிள்ளைசாந்தகுமார் நாகேந்திரன், சோதுகுன்பண்டிதவரதன் தனிராசா இராசமனோகரன், இராசகவன் நகுமராசா,

(தொடரும்)

நாகேஷ் (கல்கூலம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 3-30
எம். ஜி. ஆர்.
நி. ஆர். ராஜகுமாரி
குலேபகாவலி

ஜெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்—நிர்மலா
சுடரும் சூறாவளியும்

புஷ்பாஸி சினிமாஸ் (மருதடி)
தினசரி 3-30, 6-30, 9-30
சனி,ஞாயிறு 10-30
வொலி - விஜயா
தங்கப்பதக்கம்
[கிரிக்கெட் ஆட்டக்கள் ஒன்கூட்டியே பதிவுசெய்ய கோக்கலாம்]

"தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறவிரும்பினவர்"

சங்கரன், செல்வரம்

"இறைவன் அன்புவடிவானவன். அன்புவடிவான இறைவனை அன்புவழிநின்று வணங்க வேண்டும். நாமும் பெறும்கண் இறைவனை நேரிலன்றி உறவாடி, உரையாடி தாம் பெற்ற இன்பத்தை ஏனையோரும் பெறவேண்டும் என்ற பெருநோக்கோடு தேவார திருவாசகங்களை அருளிச்செய்தவர் மாணிக்கவாசகப் பெருமான். இறைவனைக் குருமூர்த்தியாக வழிபடுவதிலும் குறைவாக சேனாதிபதியாகிய அரசன் மகனாகிய மகிமையிலும் கண்டு வைத்தியராகியும் என்று இறைவனின் அருள்பெறும் கருணையை அனுபவித்து மகிழ்ந்தவர்."

இவ்வாறு திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் குறுக்கிட்டு அம்பாள் ஆலயத்தில் 'இறை வழிபாடு' என்னும் பொருள்பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், 'இறை வழிபாடு, இறைவனை செய்து வாழ்வதே' என்றார். [அ]

இலங்கையின்

புராதன சிறப்புக்கள் எதைக் காட்டுகின்றன?
சோவியத் கட்டிடநிபுணர் விளக்குகிறார்

சொழுமிபு, செல்வர்

பண்டைக் காலத்தில் தொழிற்நுட்பத்திறன் படைத்தவர்கள் இலங்கையில் இருந்திருக்கின்றனர் என்பதற்கு இலங்கையில் காணப்படும்புராதன சிறப்புக்கள் சான்று பகர்கின்றன என்று இலங்கைக்கு விஜயம்செய்துள்ள சோவியத் யூனியனின் பிரபல கட்டடக் கலைஞரான திருமதி குறன் காயா ஆந்தோனிது கொழும்பில் தெரிவித்தார்.

சிகிரியாவின் கலை ஓவியக் கற்றல்மைக் பெரிதும் வளர்ந்த நாளத் தெரிவித்த அவர் நம் நாட்டின் புராதன சின்னங்கள் பலவற்றை பார்வையிட்ட தாகவும் இயற்கைவெள்ளம் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது என்று சொன்னார். [அ]

ஸ்ரீதர் (யாழ். நகர்) மகேஸ்வரா
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - மஞ்சுளா
(மகுவேடங்களில்) லதா-சந்திரகலா
நம்பியார், அசோகன்
நடிக்கும்
உலகம் சுற்றும் வாலிபன்
(சஸ்பென்ஸ் கலை)

ஈழநாடு
The EELA NADU

மா, எரிபொருள் வினியோகத்தில் திருப்தி!

கொழும்பு, செவ். நாட்டில் மா, எரிபொருள் விநியோகங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்று அரசாங்க அதிபர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் மா, எரிபொருள்களை பொதுமக்கள் பெறுவதில் ஏற்பட்டிருந்த சிரமங்கள் நீங்கிவருகிறதென்றும் இவ்விநியோகங்களை திருப்திகர மாக நடைபெற்றுவருகின்றன என்றும் மன்னார், மட்டக்களப்பு, கருத்தறை, அனுராதபுரம், மொனறாகலை அரசாங்க அதிபர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் கூட்டுறவுச் சங்கங்களூடும், பேக்கரிகளூடும் நடையின்றி மாவிநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை எட்டுலோறிகளில் மா கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டதென்றும் மேலும் எட்டு லோறிகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் அரசாங்கஅதிபர் அறிவித்துள்ளார்.

மன்னார் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குவதில் முதலிடமளிக்கப்படுகிறதென்று கூறிய அவர் கொழும்பிலிருந்து பெற்றோலும், சீனன்குடாவிலிருந்து டீசலும் எதிர்பார்க்கப்படுவதாகவும் சொன்னார்.

இதேநேரம் ரயிலே ஊழியர்களின் வேலைநிறுத்தத்தினால் பொதுமக்கள் அடையும் கஷ்டத்தைத் தீர்க்க அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றது என்று தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்திலிருந்து நல்லூர்மிட்டேன கப்பல்களில் இருந்து நேற்று 3196 தொன் மாவும் 1282 தொன் அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டது என்று கப்பல் போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

நேற்று 5 மட்சத்து 50,000 கலன் எரிபொருளும், ஒரு லக்சத்து 70 ஆயிரம்கலன் டீசலும் விநியோகிக்கப் பட்டதென்றும் அமைச்சு தெரிவித்தது. (ஸ்ரீ)

"மாநில சுயாட்சி வருமானால் 'தங்குமடத்தில் தவறில்லை"

கருத்தரங்கில் உடுவில் 'தர்மர்'

நெல்லியடி, செவ். "அரசாங்கம் அரியலையைப் புத்திட்டத்தில் நிறைவேற்றி மாநில சுயாட்சி கிடைக்கக்கூடிய வழிவகை செய்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி தான் சேரும் பாதையில் தங்குமடத்தில் ஒன்றில் நம்பிக்கை இது கூட்டணியின் கருத்தல்ல. என் சொந்தக் கருத்தாகும்" என்று உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் நேற்றிரவு பருத்தித்துறை செல். தோமஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. இ. வரதராஜா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் "மாநில சுயாட்சி வழங்குவதற்கு அரசு வழி செய்தால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைமை என்ன" என்று வாலிபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு விடையளிக்கையிலேயே திரு. தர்மலிங்கம் எம். பி. மேற்கண்டவாறு சொன்னார்.

கருத்தரங்கில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து அவர் மேலும் சொன்னதாவது:- மாநில சுயாட்சி வழங்க என்ன என்பது குறித்து இன்னமும் கூடி எதுவும் ஆராயவும் இல்லை, முடிவு எடுக்கவும் இல்லை.

எதிர்க்கட்சியின் இருந்து ஆதரிக்கலாம்

மாநில சுயாட்சி வழங்க அரசு வழி ஏற்படுத்தினால் தங்குமடம் ஏற்படுத்தி எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே நாம் எமது இலட்சியங்களுக்காகப் போராடலாம்.

காணிச் சீர்திருத்தச் சட்டமசோதாவை அரசு தேசிய அரசுப் பேரவையில் கொண்டு வந்தபோது அதை நாம் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே ஆதரித்தோம். இதைப் போலவே மாநில சுயாட்சி மசோதா வந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தவாறே ஆதரவளிக்கலாம்.

ஆனால் இந்நிலைமையை தீர்மானத்தையே இளைஞர்கள் தொடர்ந்தும் செயற்படுத்த விரும்பினால் அதன்படியே தொடர்ந்தும் போராடலாம்.

நாம் அரசுடன் இதுபற்றி எவ்வேச்சுவார்த்தைகளையும் நடத்தவில்லை.

1973-ம் ஆண்டில் பிரதமர் வெளி நாடு சென்றிருந்த சமயம் வர்த்தக அமைச்சர் திரு. வி. பி. இராசரத்தினா திருவாளர்கள் எஸ். தே. வி. செல்வநாயகம், ஆமிர்தலிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பிரதமர் நாடு திரும்பியவுடன் மதிய சொல்கிறேன் என்றவர் பின் பதில் எதுவும் கூறாது வாளாவிருந்து விட்டு சமீபத்திய 'பட்ஜெட்' விவாதத்தின்போது அன்றைய பேச்சுவார்த்தைபற்றி பிரஸ்தாபித்தார்.

பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. கி. கதிரவேற்பிள்ளை, கட்டுத்தரணி வேலுப்பிள்ளை, திரு. க. சிவதாசன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (ஸ்ரீ)

மண்ணெண்ணையின்றி வெற்றிலை கருகுகிறது!

மாவிட்டபுரம், செவ். மண்ணெய்த் தட்டுப்பாட்டினால் வெற்றிலைக் கொழுந்து நாட்டிலுள்ள விவசாயிகள் அவற்றுக்கு நீர்ப்பாய்ச்சமுடியாது பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

வலிவடக்கும் பருத்தியில் ஏற்பட்டுள்ள பெரும் மண்ணெய்த் தட்டுப்பாட்டினால் பாவனையாளர்களுக்கு கார்ட்டுக்கு ஒரு போத்தல்வீதமும், விவசாய அட்டையுள்ள விவசாயிகளுக்கு ஒருலக்கர் வீதமும் மண்ணெண்ணெயேதான் கிடைக்கிறது.

ஆனால் வெற்றிலைக்கொழுந்து நாட்டியுள்ளவர்கள் மற்றைய பயிர்களைப்போல் வெற்றிலைக்கொழுந்துச் செய்கைக்கு விவசாய அட்டைமூலம் கடன் வழங்கப்படாததாலும் சாதாரண விவசாய அட்டை பெறாதிருந்தவர்.

நற்பொருள் விவசாய அட்டை இல்லாதவர்களுக்கு மண்ணெண்ணை இல்லையென்கையை விரிப்பதால் தமது வெற்றிலைக் கொழுந்துகள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாசாமிமாதம் போகத்திற் நாட்டப்பட்ட கொழுந்துகள் முன்னர்ப் தருணத்தில் நீர்த்விடக்கூடியதிலே ஏற்பட்டுள்ளதால் இருகுறித்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டு பேசி நடவடிக்கை எடுக்க இவர்கள் முன்வந்துள்ளனர். (ஸ்ரீ)

வாலிபரின் விமானப்பயணம் பொலிசாரினால் தடை

மாவிட்டபுரம், செவ். மாத்திரத்துறைப் பட்டம் படிப்புக்காக இந்திய சேவை ஆயத்தமான வைத்திய மாணவர் ஒருவர் பலாலி விமான நிலையத்தில் வைத்து பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஞானகுணன் என்ற இவ்வைத்திய மாணவர் பெங்களூரில் பட்டம் படிப்பு மேற்கொள்ளுவதற்காகப் பலாலி விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்கும் புறப்படவிருந்த விமானத்தில் புறப்படுவதற்காக போதே பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

முன்னர் சில சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த மேற்படி மாணவரை மேலும் விசாரணை செய்யும் நோக்குடன் காங்கேசன்துறைப் பொலிசார் இவரை கைதுசெய்து விசாரணை செய்ததாகவும் அறியமுடிகிறது. (ஸ்ரீ)

இவற்றிலுள்ள 'ஈழநாடு' [illegible] The Eelanadu P. O. Box 49, Jaffna Telegram: ELANADU Telephone 389. Registered as a Newspaper in [illegible]

மருந்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வரத். ஆண்பத்திரிக்கு எதிர்த்தச்சென்று கொச்சையனிக்கப் பண்டபோதிலும் ஆண்டு மரணமாகும்.

ஏற்றத்துக்கு விரைந்த காண் கேசன்துறைப்பொலிசார் இது குறித்து விசாரணை நடத்தினர் கின்றனர். (ஸ்ரீ)

.....

எழுதுவினைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவிலங்கை விசாரணை அமுல் செய்வதற்குச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் இலங்கரத்தினா உறுதியளித்தார்.

இதன்படி 6-ந் தேதி நடக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தத்தில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா ராஜிய லிபிகாரு சங்கமும் தெரிவித்தது.

கூட்டுமுன்னணி நாளை வேலைநிறுத்தம்

அரசாங்க லிபிகர் சேவைச் சங்கக் கூட்டமைப்பு பதினைந்து தொழிற்சங்கங்களைக்கொண்ட கூட்டு முன்னணி ஆறு கோரிக்கைகளை முன்வைத்து 6-ந் திகதி வியாழக்கிழமை காலை எட்டுமணி முதல் வேலைநிறுத்தச் செய்யப் போவதாகத் தீர்மானித்து அறிவித்துள்ளது.

எழுதுவினைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவிலங்கை விசாரணை அமுல் செய்வதற்குச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் இலங்கரத்தினா உறுதியளித்தார்.

இதன்படி 6-ந் தேதி நடக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தத்தில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா ராஜிய லிபிகாரு சங்கமும் தெரிவித்தது.

இ. போ. சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வேலைவுபெற்று வெளிநாட்டுக் கம்பெனியிருப்பவர்களுக்கு இந்த உத்தரவு பாதிக்கவில்லை.

இ. போ. சபை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லையென்றும் எந்த ஒரு வேலை ஊழியருக்கு வேலை நிறுத்தம் செய்யும்போதாக முன்னறிவித்தல் கொடுக்க விரும்பவில்லையென்றும் இ. போ. சபையைத்தலைவர் திரு. ஜே. ஸி. ரி. கொத்தலாவல தெரிவித்தார். ஆயினும் திடீரென ஒன்றில் வெளியாகிய செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

சந்திவாய்ந்ததாக இருக்கிறது. ஆனால் இம்மாதம் முதல் தேதி தொடக்கம் 'தேசியசேவை இரண்டு' எனப்படும் வர்த்தக சேவை நிகழ்ச்சிகளே காலையிலும் மாலையிலும் இரு தடவை ஒலிபரப்பப்படுகிறது. இப்பகுதி மக்கள் விளம்பரங்களையும் சினிமாப்பாடல்களையும் தான் விரும்புகிறார்கள் என்பது இதன் கருத்தாகும்?

மண்டதீவு உபதபாலகத்தில் ஒலிபரப்பில் நிலைரேடியோ 'கூல்' என்ற இரைச்சல் மயம்வடனிருக்கும் பலதடவை வீணாது போக்கு புகுந்து நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாமல் இடையூறு செய்கிறது.

இந்தக்குறை எப்போது தீர்ந்துபோ?

—ஊர்காவற்றுறை

நாடும் நடப்பும்

பொதுத்தேர்தல் எப்போது; தேசிய பேரவை எப்போது கலைக்கப்படும்?

இந்தக்கேள்விகளும் தேர்தல் பற்றியபேச்சுக்களும் இப்போது அடங்கி வேலை நிறுத்தம் எப்போது முடியும்; பொதுவேலை நிறுத்தமா; அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? என்ற கேள்விகள் தான் தலைதூக்கி நிற்கின்றன.

மக்களின் எண்ணம் எவ்வளவு கொடுக்கிறார்கள்; ஒரு வேளை தல் கூட்டணிக்கா, கார்ட்டுக்கா?

மா எவ்வளவு கிடைக்கும்? பால் வரக்கூடியுமா?

இந்தக்கேள்விகள் சாதாரண பொதுமக்கள் மத்தியில் காலை விலிருந்து மாலைவரை கேட்கப்படுகின்ற கேள்விகள்.

இதேசமயம் விவசாயிகளின் கேள்விகளும் பாவனைகளும் வேறு.

காங்கேசனிலிருந்து விலைகளும் உரமான கச்சக் கட்டத்தை கடந்துவிட்டன.

[illegible] மண்ணெண்ணெய் [illegible] மீண்டும் கால வேண்டியுள்ளது! இதேசமயம் ஆலுவுள்ளவர்கள் எப்படியோ கரிசனத்தைச் சமாளித்துக் கொள்கிறார்கள்!

உலகப் பிரச்சினைகள் பலவற்றுக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணமுடியுமென்ற நம்பிக்கை உலகெங்கும் வலுப்பெற்றுவருகிறது. படைபலத்தால் பிரச்சினைகளைத்தீர்க்க முற்பட்டு அவை பயன்படாமல் போயிருக்கின்றன.

அணிசேரா நாடுகளின்தலைவர்கள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவை தெரிவுசெய்யப்படுமென்னரேஉலகப்பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு வழிகாட்டியிருக்கிறார்.

இந்திய-சீன எல்லைப் போர் மூண்ட சமயத்தில் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவை சிறுவர்க்கும் இந்தியாவுக்கும் சமாதானத்தூது சென்று அமைதிநிலவச்செய்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமலிருந்த இந்திய வம்சாவழியினர் பிரச்சினைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டதனால் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவே!

பேச்சுவார்த்தைகள் மூலம் ஏர்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியுமென்ற நம்பிக்கை அவருக்கு மண்டைதீவு அதிக [4-ம் கலம் பார்க்க]